# தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
# தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

## ஊடக அறிவித்தல்

இலங்கையில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் குறிகாட்டிகளின் அந்தஸ்து தொடர்பிலான வெளியீடு ஒன்றையும் இணையதளம் ஒன்றையும் ஆரம்பித்தல்.

**தொலைபேசி இல : 0112147086     தொலைநகல்: 0112877932     26 யூலை 2017**

தொகைமதிப்பு மற்றும் புள்ளவிபரத்திணைக்களமானது, "இலங்கையில் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் குறிகாட்டிகளின் அந்தஸ்து 2017" எனும் தலைப்பிலான வெளியீடொன்றையும், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் (நி.அ.கு) பற்றிய நாளது வரைபடுத்தப்பட்ட தகவல்களை குறிப்பாக இலங்கையில் பரப்புவதற்கான இணையதளமொன்றையும் ஆரம்பித்துள்ளது.

2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் அங்கத்துவ நாடுகள், புதிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பாகமொன்றாக வறுமையை ஒழித்தல், பூமியை பாதுகாத்தல் மற்றும் அனைவருக்குமான சுபீட்சத்தை உறுதி செய்தல் என்பன தொடர்பிலான குறிக்கோள் தொகுதியொன்றை நிறைவேற்றியது. "எமது உலகை மாற்றியமைத்தல் நிலைபேறான அபிவிருத்திகான 2030 நிகழ்ச்சி நிரல்" என உத்தியோகபூர்வமாக அழைக்கப்படும் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் (SDG), 169 இலக்குகளையும் 244 குறிகாட்டிகளையும் கொண்ட பதினேழு (17) குறிக்கோள்களின் தொகுப்பாகும். நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல்களில் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளுக்கு அதிக முன்னுரிமை கொடுக்கப்படல் வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் எல்லா நாடுகளிலிருந்தும் எதிர்பார்க்கப்படுகின்றன.

2030 குறிக்கோள்களை எய்துவதிலும் இலங்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்பானது நிலைபேறான அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கையில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் எய்தப்பெறுதலை ஐ.நா.2030 நிகழ்ச்சி நிரல் உறுதி செய்வதற்கான பரிந்துரைகளை மேற்கொள்வதற்காக நி.அ.கு ஆணையின் மேல் நான்கு கருப்பொருள் சார்ந்த விடயப் பரப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அமையப்பெற்ற நான்கு கொத்தணி குழுக்களை கொண்ட பாராளுமன்ற தெரிவுக்குழு ஆகியவற்றை உருவாக்குவதன் மூலம் பிரதிபலிக்கப்படுகின்றது.

இந்த வெளியீட்டின் முதற் பிரதி, கௌரவ பிரதி சபாநாயகரும் நி.அ.கு பற்றிய பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவருமான திரு. திலங்க சுமதிபால அவர்களுக்கு, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ.ஜே.சதரசிங்க அவர்களினால் 2017 யூலை

மாதம் 26 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கையளிக்கப்பட்டது. நி.அ.கு பற்றிய இணையதளமொன்றும் இலங்கையில் நி.அ.கு பற்றிய பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவரினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அபிவிருத்தி தந்நிரோபாய அமுலாக்கலுக்கு ஒத்துழைப்பு வழங்கி, அதற்கேற்றவாறு வளங்களை ஒதுக்குவதற்கான முகாமைத்துவ கருவியொன்றாக நி.அ.கு குறிகாட்டி உருவரைச் சட்டகமொன்றுக்கான அவசர தேவையொன்று காணப்படுகிறது. நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிய நிகழ்ச்சித் திட்டங்களை அளவீடு செய்து நி.அ.கு குறிக்கோள்களை எய்துவதற்கான அனைத்து அக்கறைதாரர்களின் பொறுப்புக் கூறலை உறுதி செய்வதற்கு ஒத்துழைக்கும் அறிக்கையிடும் அட்டையொன்றாகவும் இது தொழிற்படுகிறது.

244 நி.அ.கு குறிகாட்டிகள்(குறிகாட்டி உருவரைச்சட்டம்) பொருட்டு கிடைக்கப்பெறும் தரவுகளின் அடிப்படையில் இந்த வெளியீட்டினை தயாரித்தலானது, உரிய முகவராண்மையினால் அடிக்கோட்டு தரவுகளை தொகுத்தல், முன்னேற்றத்தை கண்காணித்தல் மற்றும் நி.அ.கு இலக்குகள் அடையப்பெற்றமை அறிக்கையிடல் என்பவற்றுக்கு வசதியளிப்பதற்கான முக்கிய முயற்சியொன்றாகும் என தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ.ஜே.சதரசிங்க அவர்கள் ஆரம்ப வைபவத்தின் போது தெரிவித்தார்.

இந்த வெளியீடானது 17 நி.அ.கு, 160 நி.அ.கு இலக்குகள் மற்றும் 244 குறிகாட்டிகள் தொடர்பிலான கண்ணோட்டத்தை வழங்குகிறது. இந்த குறிகாட்டிகள் பொருட்டு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் ஏற்கனவே தொகுக்கப்பட்ட அடிக்கோட்டு தரவுகளும் இவ் வெளியீட்டில் தரப்பட்டுள்ளன. அத்துடன் உலகளாவிய, உள்நாட்டு வரைவிலக்கணங்களும் இந்த குறிகாட்டிகளுக்கான தளங்களும் இவ் வெளியீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினாலும் தேசிய புள்ளிவிபர முறையின் ஏனைய நிறுவனங்களினாலும் தொகுக்கப்படும் தரவுகளை கூட்டிணைப்பதன் மூலம் இவ் வெளியீடு தொடர்ந்து காலத்துக்கு காலம் வரைப்படுத்தப்படும் எனவும் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் நி.அ.கு தொடர்பில் ஆரம்பிக்கப்பட்ட இணையத்தள பக்கத்தை http://www.statistics.gov.lk எனும் இணையத்தளத்தினூடாக அணுகலாம் என பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

பல அமைச்சர்கள், பிரதி மற்றும் இராஜங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. எம். ஐ.எம்.றபீக் உள்ளிட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோர் இந்த ஆரம்ப வைபவத்தின் போது சமூகமளித்திருந்தனர்.

கலாநிதி ஏ.ஜே.சதரசிங்க

பணிப்பாளர் நாயகம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

# STATUS OF SUSTAINABLE DEVELOPMENT GOALS INDICATORS IN SRI LANKA : 2017



unicef
for every child

Department of Census and Statistics
Ministry of National Policies and Economic Affairs, Sri Lanka